Eelakesari Educational Supplement

ஓம்!

விலை சதம் 3

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றூங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ வைகாசி௴ ௨௮௳ (11-6-39) { இல. 32

## இலவச மத்தியானப் போசனம்

இவ்வாரம் கல்வி மந்திரி மத்தியானப் போசனத்தின் பொருட்டு 240,000 ரூபா விடப்படவேண்டும் ஏன்ற ஒரு பிரேரணையை அரசாங்கசபையில் கொண்டு வருவார். ஏற்கெனவே 850,000 ரூபா அரசாங்கசபையால் விடப்பட்டிருப்பது யாவரும் அறிந்தது. மேலதிகமாகப் பணம் தேவைப்படுவதற்குக்காரணம் இலங்கையின் பல பாகங்களிலும் மழையின்மையால் ஏற்பட்ட பஞ்சமே. இலவச மத்தியானப்போசனத்தின் பொருட்டு முதல்வருடம் 1,000,000 ரூபாவிடப்பட்டது. இத்தொகையில் 241,761 ரூபா மாத்திரந்தான் செலவு செய்யப்பட்டது. இலவச உணவு, வறுமை வாய்ப்பட்ட மாகாணங்களுக்கும் மற்றப் பகுதிகளிலுள்ள தேவையான பள்ளிக்கூடங்களுக்குமே உரியது. மந்திரியும் அவருடைய பகுதியாரும் தயாரித்த திட்டம் தேவையை மதிப்பிடாமல் மனம் போன போக்கின்படி தயாரித்ததென்னலாம்.

பணம் முழுவதையும் செலவு செய்யாததற்கு மந்திரி கூறிய நியாயம் மேலதிகமான பணம் விடப்பட்டதென்பதே. இந்த நியாயம் பொருந்தமற்றது. பணம் கொடுக்கும் விஷயத்தில் வித்தியாபகுதியார் பக்ஷபாதங் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. தேவையான எத்தனையோ பள்ளிக்கூடங்களுக்கு இலவசபோசனங் கொடுபடவில்லை.

இலவச போசனத்துக்காக விடப்படும் பணத்தை ஒழுங்காகச் செலவு செய்வது கல்விப் பகுதியாரின் கடன். பணம் தக்க முறையிற் செலவு செய்யப்படுகிறதா வென்பதை நன்றாக மேற்பார்வை செய்வது நலம். வித்தியாசாலைகளிலுள்ள பகுதிகளில் வேலைபார்க்கும் வைத்தியர்களின் உதவியும் அதிகமுபயோகமாயிருக்குமாதலால் அவர்களையும் மேற்பார்வை பார்க்க விட வேண்டும்.

### கல்விப் பிரமாணத் திருத்தங்கள்

வித்தியா சங்கத்தார் ஏற்படுத்திய சபையும் சிக்கன சபையாருங் கூடித் தயாரித்த கல்வித் திட்டம் முன்கொண்டுவந்த திட்டத்திலும் ஓரளவு சிறந்ததென்று கூறப்படுகிறது. சராசரிகளில் அற்பமாகக் குறைத்தும் சம்பளங்களை அற்பமாக உயர்த்தியும் திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் இன்னும் சமாச்சாரப் பத்திரிகையில் வெளிவரவில்லை. எனினும் யாமறிகிற வரையில் கல்வியுலகத்தை அதிகம் பாதிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் அநேகம் பிரதம பாடசாலைகளாக இருக்கவேண்டி வரும். தமிழ் உயர்தரப் படிப்புக்கு வசதிகள் மிகவுங் குறைந்து போகும். வித்தியாசாலை முகாமைக்காரருக்கு அதிக தத்துவங்களை இப் புதிய திட்டம் கொடுக்கின்றது. முகாமைக்காரருடைய அநுதாபமின்றி உபாத்தியாயர்கள் உத்தியோக உயர்ச்சியடைவது கஷ்டம். இப் பிரமாணங்கள் வெளிவந்தவுடன் ஆசிரியருலகம் தக்க நடவடிக்கைகளைக் கையாளும் என்று நம்புகிறோம்.

பொல்லாத காமப் புலைத்தொழிலில் என்னறிவு, செல்லாமல் நின்மனறிந்து சேருநாள் எந்நாளோ.

# "இலங்கை மாதா"

இணுவில், R. K. சண்முகம் (223)

(" வீரசுதந்தரம் " என்றமெட்டு)

(1) இந்து சமுத்திர மத்தியிலே யயன்
எம்மிலங்கை படைத்தான்—அது
எவ்வுல கோர்க்குமோர் பேரொளி யாகி
இலங்கி விளங்குதற்கே.

(2) வான்முகில் வந்து விளையாடும் சிறீ
பாத முதல்மலையும்—உயர்
மாவலி கங்கை முதலாறுங் கொண்டு
மன்னுவ திந்நாடே.

(3) எவ்வுல கும்புகழ் மாமணி முத்துநெல்
இன்னும் பலபொருளும்—நிகர்
இன்றி முதல்வள்ளல் போல எவர்கட்கும்
ஈகுவ திந்நாடே.

(4) கந்த னுறைகதிர் காமமும் தந்தையார்
கண்ணுதல் கோவில்களும்—பூங்
காவனமும் பல தீர்த்தமும் மேவிச்சீர்
காட்டுவ திந்நாடே.

(5) நந்தமிழ் மன்னரும் சிங்கள மன்னரும்
நட்புட னாட்சிசெய்தே—பல
நன்மைசெய் வாவியும் சிற்பமும் கீர்த்தியும்
நல்கிய திந்நாடே.

(6) நாவலரும் ராச கேசரியும்*சுன்னை
நண்ணும் புலவரின்னோர்—பல
நற்றமிழ் நூலும் உரையும் பலப்பல
நாட்டிய திந்நாடே.

(7) சைவமும் புத்தமும் சால உடன்பட்டு
தர்மம் வளர்ந்தோங்கி—ஒரு
தாய்பெற்ற சேய்கள்போ லன்புந் தயையும்(ந்)
தழைத்தது மிந்நாடே.

(8) அன்னை வருந்தி யழஅருஞ் சேய்களை
அந்நியர் வேறுசெய்ய—சில
ஆதார மின்றிய சட்டங்கள் கொண்டிப்போ
அஞ்சிடச் செய்தல்நன்றோ.

(9) தொன்மையும் மேன்மையும் பெற்றஎம் அன்னையாள்
தூக்கித் திருத்தல்நன்றோ—யாம்
தொண்டுசெய் தொற்றுமை கொண்டு நிமிர்ந்திடில்
தூய முகமலர்வாள்.

* சுன்னை—சுன்னாகம்.

# "புத்திமான் பலவானாவான்"

[ஆர். என். ராமலிங்க முதலியார்,
திருவள்ளுவர் தமிழ்ச்சங்க காரியதரிசி, பர்ச்சல்.]

ஒரு மிராசுதார் ஒருநாள் தன் அலுவலில் தனக்கு உதவி செய்ய ஒரு பையன் தேவையென்று விளம்பரஞ் செய்திருந்ததில், ஏறக்குறைய நூறு பையன்கள் விண்ணப்பம் விண்ணப்பித்துக்கொண்டார்கள். அவைகளில் அவர் ஒரு விண்ணப்பத்தைமாத்திரம் தெரிந்தெடுத்து, மற்றவைகளை எல்லாம் முறையே விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவிட்டார். சின்னாட் கழிந்தபின், தனது நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார் மிராசுதார். நண்பர் மிராசுதாரைப் பார்த்து, "நீர் நூறு விண்ணப்பங்களில் ஒன்றைமாத்திரம் தெரிந்தெடுத்ததின் விசேஷமென்ன. யாரும் அப்பையனைப் பற்றி சிபார்சுக் கடிதம் ஒன்றுகூடக் கொடுக்கவில்லையே"; என வினவினர். "மிராசுதார், சிநேகிதரே நீங்கள் நினைத்தது தவறு. அச் சிறுவனைப்பற்றி வேண்டியமட்டும் சிபார்சுகளிருக்கின்றன. அவற்றைச் சொல்லுகிறேன் கேளும்" என்றார்.

"முதலாவதாக, அச் சிறுவன் என் அறைக்குள் வருமுன் தன் பாதங்களை நன்றாகத் துடைத்து, கதவைத் தான் வந்ததும் தாளிட்டான். இது இவன் மெத்த சுத்தமுள்ளவன், ஒழுங்குள்ளவன் என்பதைக் காட்டிற்று. இரண்டாவதாக நான் இப் பையனோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, வயதில் முதிர்ந்த முடமான பெரியவர் ஒருவர் என்னைத் தேடி வந்ததும் பையன் அக்ஷணமே எழுந்திருந்து, தான் அமர்ந்திருந்த ஆசனத்தைத் தான் ஒருபோதும் அறியாத அப்பெரியாருக்குக் கொடுத்தான். இது அவன் மற்றவர்களிடத்தில் அன்பும் உபசரிக்கும் தன்மையும் நிறைந்தவன் என்பதை விளக்கிற்று. இதோடு இப் பையன் என் உத்தியோகசாலையை அணுகியதும், தன் குல்லாவை எடுத்துக்கொண்டு, நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மரியாதையாயும் தீவிரமாயும் விடை பகர்ந்தான். இதனால் இச்சிறுவன் மற்றவர்களிடத்தில் அதிக மரியாதை உள்ளவனென்பதை நிதானித்தேன். பின்னர் என் அறையில் வேண்டுமென்று ஒரு புஸ்தகத்தைப் போட்டிருந்தேன். விண்ணப்பங் கொண்டுவந்த மற்றவர்கள் அப் புத்தகத்தை மிதித்தும் அப்புறம் தள்ளியுமிருக்க, இப்பையன் தலைகுனிந்து அதை எடுத்து மேஜையின்மேல் வைத்தான். பொருள்களில் இவன் கண்ணும் கருத்தும் உள்ளவனென்பதை இதனால் நான் யூகித்துக்கொண்டேன். இதுமட்டுமா, மற்றவர்களைப்போல் ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு சப்தம் செய்யாமல் என்னோடு பேசத் தன் சமயம் வருமளவரைக்கும் பொறுமையாய்க் காத்திருந்தான். அடக்கம் என்னும் அருங்குணம் இவனிடம் நிலைத்திருப்பது இக்காரியத்தில் விளங்குகிறது. கடைசியாக இவ்ன்

# சுதந்திரம்

போ. சிவஞானம், மயிலிட்டிதெற்கு (ச. எண். 1)

மணிக்கு வயது ஒன்பது இருக்கும். பாடசாலையில் ஐந்தாம் வகுப்பிற் படித்துவந்தான். கிளி வளர்ப்பதில் மணிக்கு நிரம்ப ஆசை. எத்தனையோ நாள் கஷ்டப்பட்டபின், அவனுடைய தகப்பனர் அவனுக்கு ஓர் கிளி வாங்கிக் கொடுத்தார். கிளியை மிகவும் அன்புடன் வளர்த்தான். அதற்கு வேண்டிய உணவை வேண்டிய வேண்டிய காலத்திற் கொடுத்து வந்தான். தனக்குத் தாயார் கொடுக்கும் பால் பழம் முதலியவற்றையும் கிளிக்குப் பகிர்ந்து கொடுத்தே உண்ணுவான். கிளி சற்று வருத்தப்படுவதுபோற் காணப்பட்டால் மனம் சகிக்கமாட்டான் மணி.

பாடசாலை நேரம் முடிந்ததும் அதிவிரைவில் மணி வீட்டுக்குத் திரும்புவான். வீட்டிற்கு வந்ததும் வாராததுமாய் வீட்டிலே தொங்கிக்கொண்டிருக்கும் கிளிக் கூண்டினண்டை வருவான். அந்தக் கிளிக்குப் பேச்சுப் பழக்குவதே அவனுடைய பிரதான வேலையாயிருக்கும். பாடசாலையிலே தனக்கு உபாத்தியாயர் கற்றுக்கொடுப்பதையெல்லாம் அக் கிளிக்குக் கற்றுக்கொடுப்பான். அக் கிளியினுடைய உபாத்தியாயராய்விடுகிறான் மணி. ஒரு நாள் வகுப்பிலே, 'சுதந்திரம்' என்ற பாடத்தைப் படிப்பித்தார் உபாத்தியாயர்.

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார்—பின்பு
வேறொன்றும் வேண்டாரே"

என்ற பாரதியார் பாடலைப் படித்து விளங்கச் செய்தார். உபாத்தியாயர் சொன்னவைகளையெல்லாம் மனதிற் பதித்துக்கொண்டான் மணி. இன்று வீட்டிற்குச் சென்றவுடன் தான் படித்த பாடத்தைக் கிளிக்கும் கற்பித்துக் கொடுக்கவேண்டுமென்பதே அவனது சிந்தனையிலிருந்தது. உபாத்தியாயர் என்ன தொனியுடன் பேசினாரோ? அத்தொனியுடன் பேசிப் பயின்றான் மணியும். உபாத்தியாயர் கேட்ட கேள்விகளை எல்லாம் தானே கேட்டு மறுமொழியையும் சொல்லிக்கொண்டான். பாடசாலை முடியும் நேரத்தை அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்

அன்று பாடசாலை முடிந்ததும் மிகவும் சந்தோஷமாக இருந்தது மணிக்கு. ஓட்டமாய் ஓடிவந்து வீடு சேர்ந்தான். தனது புஸ்தகங்களை ஒருபுறத்தே எறிந்துவிட்டே கிளிக்குப் பாடம் சொல்ல ஆரம்பித்தான். அன்றைய தினம் அதிக உற்சாகத்துடன் காணப்பட்டது கிளியும். உபாத்தியாயர் கற்றுக்கொடுத்ததை எல்லாம் ஒவ்வொன்றாகக் கிளிக்குக் கற்றுக்கொடுத்தான். 'வீரசுதந்திரம்' என்ற பாடலையும் நன்றாக மனப்பாடம் செய்வித்தான். மீட்டும் மீட்டும் கேட்டுப்பார்த்தான் பூர்த்தியாக அந்தப் பாடலைக் கிளி பாடியதைக் கேட்க அவனுக்கு அளவுகடந்த சந்தோஷம் உண்டாயிற்று.

மணியின் உபாத்தியாயர் வேலை முடிந்தது. நேரமும் நாலுமணி இருக்கும். மணி எழுந்து தேனீர் சாப்பிடச் சென்றான். சற்று நேரத்திலெல்லாம் வழக்கம்போலக் கிளிக்குக் கொடுக்கும் பாலை ஒரு கிண்ணத்தில்விட்டுக்கொண்டு கிளிக்கூண்டினண்டை வந்தான். அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டாற்போலிருந்தது. இதற்குக் காரணம் அவன் கண்ட காக்ஷியே? அவன் தன் உயிரினும் பெரிதாகப் பாராட்டிய கிளி இறந்தாற்போற் காணப்பட்டது. அவனையறியாமலே அவனுக்குக் கண்ணீர் சொரிந்தது. பாற் கிண்ணத்தை வைத்துவிட்டு அக்கிளியைக் கையாலெடுத்துத் திரும்பத் திரும்பக் கொஞ்சினான். கிளி மூர்ச்சையடைந்திருப்பதுபோல் அவனுக்குத் தோற்றப்பட்டது. கிளியைத் தரையில் வைத்து ஒரு விசிறியாற் சற்று நேரம் விசிறிக்கொண்டிருந்தான். சற்று நேரத்திலெல்லாம் கிளி எழுந்து பறந்துபோய் ஒரு மரக்கிளையில் இருந்தது. சந்தோஷமும் பிறந்தது. பாற் கிண்ணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, கிளியை மிகவும் அன்புடன் கூப்பிட்டான். ஆனால் அவனுடைய எண்ணத்திற்கு மாறாகக் கிளி மரக்கிளைகளிற் பாய்ந்து விளையாடிற்றேயன்றி அவனிடம் திரும்பி வரவில்லை. மீண்டும் மணிக்கு அழுகை வந்தது. "பால், பழந்தருகிறேன் வா," என அழைத்தான். கிளியோ வரவில்லை. நீ விரும்பியது எதுவோ அதைத் தருகின்றேன் வா என அழைத்தான். தான் விரும்பிய முழுவதும் பெற்றுவிட்டாற்போல மீண்டும் மீண்டும் பாய்ந்து விளையாடிற்று அந்தக் கிளி. "நீ என்னையும் வேண்டாயோ" என்று அலறினான் மணி.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார்—பின்பு
வேறொன்றும் வேண்டாரே.

என்று கிளி அதிக உற்சாகத்துடன் பாடிற்று.

---

உடை சாதாரணமாயும், தலை ஒழுங்காய்ச் சீவப்பட்டதாயும், பற்கள் தந்தத்தைப்போல் வெண்மையாயும், கையின் நகங்கள் கறையில்லாமலும் காணப்பட்டன. மற்றவர்கள் தங்கள் தங்கள் யோக்கியதையைப் பற்றி சிற்சில பிரமுகர்களிடமிருந்து சிபார்சுக் கடிதங்களைப்பற்றி என்னிடம் கொடுத்தார்கள். இச் சிறுவனோ தன்னைப்பற்றி நேரிலேயே தகுந்த சிபார்சு காட்டிவிட்டான் என்றார்.

எது சரியான சிபார்சு? கடிதங்களா வேண்டியமட்டும் எல்லாரிடத்திலும் வாங்கி வரலாம். என்ன பிரயோசனம். பின் மனிதனிடத்தில் உண்மையாய் உறைந்துள்ள நற்குணங்களே அவனுக்குச் சரியான சிபார்சு. இச்சிறு கதையை வாசிக்கும் எல்லாப் பெற்றோரும் தங்கள் குழந்தைகள் பிற்காலத்தில் உண்மையும் ஒழுக்கமுமுள்ள நற்குணசீலர்களாக விளங்கும்படி அவர்களைச் சிறந்த நல்வழியில் பழக்கிப் பாலனைப் பிறந்து, பாவியனாகி பக்தனாய்ப் பாடுபட்டு பரிசுத்த ஜீவியம் செய்ய பராபரன் கிருபை செய்வாராக.

---

ஆன புறக்கருவி ஆறுபத்தும் மற்றுளவும், போனவழி யுங்கூடப் புல்முளைப்ப தெங்நாளோ.

# காதும் கம்மலும்.

த. ராதாரத்தினம் (195)

" துரதிர்ஷ்டம் என்றால் என்ன?" என்று ஒரு நாள் சீனுஅப்பாவிடம் கேட்டான். தாத்தா பின்வரும் கதையைக் கூறினார்: –

ஓர் ஊரில் நாகரத்தின செட்டியார் என்ற பெரிய வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் பரம உலோபி. ஒருவருக்கும் ஒரு தம்பிடிகூட இனாமாகக் கொடுக்கமாட்டார். அவருக்குச் சாம்பன் என்ற ஒரு மகன் இருந்தான். அவனுக்குத் தக்க பருவம் வந்ததும் அவன் தந்தை அவனுக்கு விவாகஞ் செய்து வைத்தார். சாம்பனுடைய மனைவிக்கு நகைகளின் மேல் ரொம்ப ஆசை. அவள் சாம்பனை நல்ல நகைகள் வாங்கிக் கொடுக்கும்படி கேட்டாள். அவனுக்கும் தன் மனைவிக்கு நல்ல நகைகள் வாங்கிக் கொடுக்கவேண்டு மென்ற ஆசை இருந்தது. பணப் பெட்டியின் சாவி செட்டியாரிடம் இருந்தபடியால் செட்டியார் உயிருடன் இருக்கும் வரையில் நகை வாங்குவதற்கு முடியவில்லை. செட்டியாரும் கொஞ்ச நாட்களுக் கெல்லாம் இறந்துவிட்டார்.

சாம்பனை அவன் மனைவி நகை வேண்டுமென்று அடிக்கடி உபத்திரவம் செய்து வந்தாள். ஒரு நாள் சாம்பன் கையில் இரண்டாயிரம் ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு நகை வியாபாரி இடம் சென்றான். அநேக நகைகளைப் பார்த்த் பிறகு இரண்டு நல்ல வைரக்கம்மல்களை எடுத்தான். " ஐயா! இந்தக் கம்மல்களின் விலை என்ன?" என்று நகை வியாபாரியைப் பார்த்துக் கேட்டான்.

" கம்மல்களின் விலை இரண்டாயிரம் ரூபாய்" என்று வியாபாரி பதில் சொன்னான். ரூபாயை வியாபாரி இடம் கொடுத்துவிட்டுக் 'கம்மல்களைத் தன் மனைவியிடம் கொண்டுவந்து கொடுத்தான். வரும் வழியில் அந்த நகையைச் சாம்பன் பல பேரிடமும் காண்பித்தான். அதன் விலையையும் சொல்லிப் பெருமை அடித்துக் கொண்டான். அந்த நகையை இரண்டு திருடர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்று இரவு எப்படியாவது அதைத் திருடிக் கொண்டுபோய் விடுவதென்று தீர்மானித்தார்கள்.'

சாம்பன் வீட்டிற்கு வரும் பொழுது இருட்டிவிட்டது. நகையைப் பார்த்ததும் அவன் மனைவி சந்தோஷங் கொண்டாள். பிறகு காதில் போட்டுப்பார்த்தாள். காதில் துவாரம் சிறிதாய் இருந்ததால் கம்மல் நுழையவில்லை. காதின் துவாரத்தை எப்படிப் பெரிதாகச் செய்யலாம் என்று பக்கத்து வீட்டில் விசாரித்தாள்.

" அம்மா, ஒரு பனை ஓலையில் கொஞ்சம் களிமண்ணை வைத்துச் சுருட்டுங்கள் பிறகு அதை உங்கள் காதில் போட்டு வையுங்கள். இரண்டு நாட்களில் காதின் துவாரம் பெரிதாய் விடும்." என்று பக்கத்து வீட்டுப் பெண் சொன்னாள்.

சாம்பன் மனைவி அதன் படியே கம்மலை ஜாக்கிரதையாய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டாள். பிறகு களிமண் அடைத்த பனை ஓலையைக் காதில் போட்டுக் கொண்டு படுத்துக்கொண்டாள்.

நடு இராத்திரியில் சாம்பன் மனைவி வீட்டு வாசலுக்கு வந்தாள். வாசல் திண்ணையில் இரண்டு திருடர்களும் கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். " கம்மலைப் போட்டுக் கொண்டு வருவாள்; நாம் அடித்துக் கொண்டு போய் விடலாம்" என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். சாம்பன் மனைவி வெளியில் வந்ததும் இரண்டு திருடர்களும் அவளை நோக்கிப் பாய்ந்தார்கள். ஒருவன் ஒரு காதின் நுனியையும் மற்றொருவன் மற்றோர் காதின் நுனியையும் அறுத்துக் கொண்டு ஓடினார்கள்.

வைரக்கம்மல்கள் பெட்டிக்குள்ளே பத்திரமாய் இருந்தன. ஆனால் சாம்பன் மனைவிக்கு அவற்றைப் போட்டுக் கொள்ளக் காது கிடையாது. திருடர்களுக்கோ அவர்களுடைய கொடிய செய்கையின் பயனாக பனை ஓலையும் களி மண்ணுந்தான் கிடைத்தன. இப்படி நேர்வதைத்தான் "துரதிர்ஷ்டம்" என்று உலகத்தார் சொல்லுகிறார்கள், என்று அப்பா கதையைக் கூறிமுடித்தார்.

# பொது அறிவு வினாக்கள்

( கல்முனை )

1. உலகிலே ஆதியில்வல்லரசினைத்தாபித்தோன் யாவன்?
2. மரத்தின் பெயர் சேராத பழத்தின் பெயரென்ன!
3. இந்தியா ஒளஸ்திரேலியாவுடன் ஒன்று பட்டிருந்த காலத்தில் என்னபெயர் பெற்றிருந்தது?
4. தொல்காப்பியத்திற் குரையியற்றிய அறிவர் யாவர்?
5. எண்வகை வனப்புக்களு மெவை?
6. இந்தியாவிற்குப் பரதகண்டம் என்னும் பெயர் எவ்வாறுண்டாயிற்று?
7. இலங்கையிலிருந்து லண்டனுக்கு ஆகாயவிமானத்தின்மூலம் போக எத்தனை நாள் செல்லும்?
8. தற்போது அரசியற் குழப்பத்திலீடுபட்டிருக்கும் நாடுகளெவை?
9. உருக்குமணி, சத்தியபாமை இவர்களின் தந்தை யார்?
10. முத்தமிழ்க் காப்பியம் எது?
11. இலங்கையில் அதியுயர்ந்த மலையெது?

" அந்தகனுக் கெங்குப இரு ளானவா று அறிவில், வந்த இருள் வேலை வடியுநாள் எந்நாளோ.

# "முன்னமே சொன்னேன்"

(ச. ள். 223)

கம்பர், ஓர் சிறந்த மகாகவி; வசீகர சக்தி வாய்ந்தவர். அவர் செய்யுட்கள் யாவும் கம்ப சூத்திரங்களென் றழைக்கப்படும். சூத்திரங்களாயிருந்த போதிலும், மற்றையோர் செய்யுட்கள் போலாகாது. உயிர்பெற்ற செய்யுட்களாய் விளங்குகின்றன. அன்னாரின் சொற் சித்திரங்கள் பலவற்றைக் கவனிப்பாம்;

வாலி, வானர நாட்டுத் தலைவன்; அவன் மனைவி தாரை எனப்படுவாள். அவ் வீரனது விசிஷ்ட குணங்களுக்கு ஏற்ற குண நலன்கள் யாவும் நன்கு அமையப் பெற்றவள். இல்லற தருமத்தைச் செவ்வனே நடாத்தும் உத்தமி; தன் கணவனிடத்து மிகுந்த அன்பு பூண்டவள். தன் தலைவன் இறந்து கிடத்தலைக் கண்ட தாரை, "ஐயனே; இவ்வுலகில் என்னைத் தனியே யிருக்கவிட்டு நீ! வானோர் நாடு சென்றாயே; ஐயா! நீ! எனதாவி என்பதும் பொய்யோ"? என உள்ளமுருகிக் கூறும் வார்த்தைகளால், இவள் மனப் பான்மை இனிது விளங்கும். இல்லற தருமத்தை இனிது நடாத்தும் இயல்பினிலமையாது தன் துணைவனுக்கு உற்றதுணையாய் நின்று உறுதி கூறும் இயல்பமைந்து விளங்கினாள். வாலி தன் தம்பியோடு போர் செய்யப் புறப்படுங்கால், தாரை தன் நாயகனைச் செலவொட்டாது தடுத்தனள். தன் நாயகன் செல்லுதலை நினைந்து, நினைந்து கண்ணீர் வடித்தாள்; இரு கரங்களாலும் தழுவினாள். தடுத்துமென்! அன்னோன் யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டான். தன் மனைவியின் மனக் கருத்தையறியாத வாலி, அவளை நோக்கிப் "பெண்ணே! என்னை விலக்காது செலவிடுக; வெளியே நின்ற பகைவன் யாவனே ஆயினும் ஆகுக; இன்னே அவன் உயிர் கவர்ந்து வருவல்" என்று அரற்றினான். அவ்வமையத்தில் அம் மெல்லியல் மீண்டுந் தன்னறிவின் பெருமையால் சில ஏதுக்களை எடுத்தியம்பினாள். "நாதா! இதுகாறும் உமது நாமத்தைக் கேட்டு நடுங்கி ஓர் மலைக்குகையில் ஒழித்திருந்த உம்பி இதுபொழுது நின் கோட்டையையணுகிப் போர் செய்ய அழைத்தால் அவன் பெருந்துணை வலி பெற்றுள்ளானென்பதை அறிதிர்" என வினயமாய்க் கூறினாள். இவ்வார்த்தைகள் அவன் செவிக்கேறாவாயின. மனையாள் வார்த்தை கேளாது சென்றானாதலின் உயிர் துறந்தான். இறந்தபின் தாரை தன் கணவனிடத்து வைத்த அன்பின் மிகுதியால் ஆற்றொணாத் துயரெய்தி சோக பாஷ்பமாம் பெரு வெள்ளத்திலமிழ்ந்தினாள். அமிழ்ந்தி;

"சொற்றேன் முந்துற அன்னசொற்கேளாய்
அற்றான் அன்னது செய்கலானென
உற்றாய் உம்பியை ஊழிகாணும் நீ
இற்றாய் நானுனை யென்று காண்பேனோ"

என்றியம்பி அரற்றலானாள்.

இந் நிலையில் நின்ற இவளது கோலத்தை நோக்குழி எவர்க்கும் ஆற்றொணாத்துயரமுண்டாகும். உடனே இம்மடவரல் அவிழ்ந்த கூந்தலொருபுறமாகவும், நெகிழ்ந்த துகில் ஒருபுறமாகவுங் கிடப்ப தன் காதலன் மார்பில் விண்ணிற்றுலங்கும் மின்னென விழுந்து புரண்டாள். இனிய மொழிகளால் அவன் மகிமைகளைப் பேசி இரங்கினாள்; ஏங்கினாள்; உள்ளமுருகினாள். என்னே இம் மடவாரலின் பெருந் தன்மை. மாசிலாக் கற்புவாய்ந்த இம்மாது தன் மைந்தனை அங்கதனுக்கும், அரசாங்கத்துக்கும் உற்றதுணையாயமைந்து புனையா ஓவியம் போன்று உயிர் வாழ்ந்தாள். இம் மங்கையைக் கண்டபோது, இலக்குவன் "இனையராம் என்னையீன்ற இருவரும்" என்றெண்ணி வருந்தினனென்றால், தாரையினது உள்ள நெகிழ்ச்சியும், விடாப் பேரன்பும் எம்மனோரால் கணிக்கப்படும் தரத்தனவோ?

---

விசாகப்பெருமாளையரவர்கள்

இயற்றிய

அணியிலக்கணம்

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதலபோய், நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநாள் எந்நாளோ.

# கட்டுரை யெழுதுதல்

ம. க. நடராசா (ச. எண் 230)

நாம் நமது மன எண்ணங்களைப் பிறர்க்குத் தெரிவுபடுத்துதற்குச் சாதனமாக அமைந்துள்ளவை பேச்சு எழுத்து என்னும் இரண்டுமாம். பேச்சினால் மன எண்ணங்களை எதிர் நிற்போர்க்கு மாத்திரமே எடுத்துக்காட்ட இயலும். ஆனால் எழுத்தினாலே பல மைல் தூரத்திலுள்ளவர்களுக்கும் நமது அபிப்பிராயங்களை அறிவுறுத்தலாம். இதுமாத்திரமா? பல்லாயிரம் வருடங்களுக்குப் பின்னர் வரப்போகும் சந்ததியார்க்குங் கூட நாம் எழுத்தினாலே நமது அபிப்பிராயங்களை விளங்கவைக்கலாம். இவ்விதம் ஒரு விஷயத்தைப்பற்றி பிறர்க்கு விளங்க வைத்தற்காக சொல் சொற்றொடர் முதலியவற்றை உபயோகித்து முறைப்பட எழுதலே கட்டுரை எழுதல் அல்லது வியாசமெழுதுத லெனப்படும். ஒவ்வோர் விஷயத்தைப் பற்றியும் சிறுச்சிறு கட்டுரைகள் எழுதலாம்; அல்லது பெரிய பெரிய வியாசங்கள் எழுதலாம். இது எழுதுபவரின் அறிவிலும் நேரத்திலும் தங்கியிருக்கிறது. க. பா. த. ப. வகுப்புப் பரீட்சை முதலியவற்றில் ஏறக்குறைய பதினைந்து நிமிஷநேரத்திலேயே ஒரு கட்டுரை எழுதும்படி பல விஷயங்கள் கொடுக்கப்படும். ஒரு மாணவன் அப்பல விஷயங்களுள்ளும் எவ்விஷயத்தைப்பற்றி நன்கு அறிந்துள்ளானோ அவ்விஷயத்தைப்பற்றியே அவன் கட்டுரை எழுதத்தொடங்கவேண்டும்.

கட்டுரை எழுதத்தொடங்குமுன் இரு விஷயங்கள் கவனித்தற்குரியன. முதலாவது எழுதப்போகும் விஷயத்தைப்பற்றிய வரலாறுகளை ஞாபகப்படுத்துதல். இரண்டாவது விஷய வரலாறுகளை எழுதப்போகும் முறையைக் கவனித்து ஒரு அட்டவணை (வியாச உருவக் குறிப்பு) தயாரித்தல்.

கட்டுரை எழுதும்போது முன்னெழுதிய அட்டவணையிலுள்ள பிரிவுகளைக் கவனித்தே எழுதல் வேண்டும். பின் எழுத வேண்டியதை முன்னும், முன் எழுத வேண்டியதைப் பின்னும் எழுதலாகாது. முன் எழுதியவற்றிற்கு மாறுபடப் பின் எழுதுதல் பெருங்குற்றமாகும். சிலர் எழுத வேண்டிய விஷயத்தை விடுத்தும் பிற விஷயத்தை அதிகம் எழுதுகிறார்கள். உதாரணமாக, ஒளவையாரைப்பற்றி எழுதத்தொடங்கிய ஒரு மாணவன் புகழேந்திப் புலவரின் சிறப்புக்களையெல்லாம் விரித்து எழுதுதலைக்கூறலாம். இது பெருந்தவறாகும். மாணவர்கள் கட்டுரை எழுதும்பொழுதெல்லாம் தாம் எழுத எடுத்துக்கொண்ட விஷயத்தையும் அதன் அட்டவணையையும் தியானித்தபடி எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொண்ட விஷயத்தை விளக்குவதற்கு வேறு உண்மை வரலாறுகளை உதாரணமாகக் காட்டலாம்; அல்லது முன்னோர் கூறியுள்ள உரைப்பகுதிகளையாவது செய்யுட்களையாவது எடுத்துக்கூறலாம். இது கட்டுரைக்கு ஓர் சிறப்பாகும்.

பரீட்சார்த்திகள் தாம் கட்டுரை எழுதும் பத்திரத்தைப் புனிதமாக வைத்திருத்தல் வேண்டும்; எழுத்துக்களை உறுப்பாக எழுதுதல் வேண்டும்; எழுத்துப்பிழை வசனப்பிழையின்றி உறுப்பிசைக்குறி முதலிய குறிகளை வேண்டிய இடங்களில் குறித்து எழுதுதல் வேண்டும். ளகர ழகரம், றகர ரகரம், நகர னகரம் முதலியவற்றின் உபயோகத்தை யெல்லாம் யாவரும் நன்குயறிந்து பிழையின்றி எழுதுதற்கு முயல வேண்டும். குறிகளும், பொருள் வேறுபாட்டை உண்டாக்குவனவாகலின் அவையும் வேண்டிய வேண்டிய இடங்களில் குறிக்கப்படவேண்டும். சொற்கள் ஒன்றோடொன்று விதிப்படி புணர்த்தப்பட்டு எழுதப்பெறல் வேண்டும். ஒருமையில் தொடங்கிப் பன்மையில் முடித்தல் முதலாய வசனப்பிழைகளோடு சிலர் எழுதுகிறார்கள். நீண்ட வசனங்கள் எழுதுவதாலும், அவதானமின்மையாலுமே இப்பிழைகள் ஏற்படுகின்றன. நீண்ட வசனங்களிலும் பார்க்கச் சிறு வசனங்களே கருத்து விளக்கத்திற்கு விசேடித்தன. ஆனபடியால் ஒரு கட்டுரையில், சிறுச்சிறு வசனங்களே அதிகமாக இருத்தல் நல்லது. இதுமாத்திரமல்லாமல் வசனங்களைக் கேட்பவர்களுக்கு இனிமை பயக்கக் கூடியதாகவும் எழுதப்பழகுதல் வேண்டும்.

# "மாமியார் வீடு மகா சௌக்கியம்"

ரங்கராசா ஓர் பிரபல குமஸ்தா. அவருடன் அவரது வயது சென்ற தாய் வசித்து வந்தாள். அவள் தன் குமாரனில் மிக்க விருப்புடையவள். தன் பிள்ளை உண்பதற்குமுன் அவளுக்கு உணவு கொள்ள மனம் வருவதில்லை. குமஸ்தாவும் தன் அன்னையில் அன்புடையராகவே யிருந்தார். அநேகமாகக் குடும்பங்களில் ஒற்றுமை நிலை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. விவாகம் ஆவதற்குமுன் இருக்கும் அமைதியும், ஆனபின்பு வீட்டிலுண்டாகும் கலகங்களும். அந்தக் கலகங்களைப் பெண்கள் விருத்தி செய்வதும், புதுமையான விஷயங்களன்று.

மேற்கூறிய குமஸ்தாவுக்கு விவாகம் ஆயிற்று. அவரது மனைவி, வீட்டிற்குவந்தாள். அன்று முதல் அந்தவீட்டிற் தடையின்றி வளர்ந்து வந்த அன்பும், அமைதியுங் கலகத்தை அடைந்தன. தாயினிடமுள்ள குறையோ, அன்றேல் வந்த பெண்ணினுடைய குறையோ தெரியவில்லை. அந்த வீட்டில் மூவரும் சந்தோஷமாக இருக்க முடியவில்லை, மாமியாருக்கும் மருகிக்கும் மனப் பொருத்தம் ஏற்படவில்லை. பகை தானுண்டாயிற்று. அதுவர, வர விருத்தியடைந்துவந்தது.

வந்த பெண்ணிற்கு, அதிகாரம் செலுத்தவேண்டுமென்ற ஆசை அதிகமாயிருந்தது. தன் கணவனிருக்கும்போது ஒருவிதமாகவும்; இல்லாதபோது வேறுவிதமாகவும் மாமியாரை நடத்திவந்தாள். "இதுவரையில் நானிவ்விட்டில் நடத்திவந்த அதிகாரத்தை இச்சிறுக்கியா தடுப்பது," என்ற ரோசம் கிழவிக்குண்டாயிற்று. அப்புறம் யுத்தமுண்டாவதன்றி அமைதிக்கு வழியேது?

குமஸ்தாவிடம் இருவரும் முறையிட்டார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கட்சியே நியாயமானதெனத் தோன்றும்படி சொன்னார்கள். அவருக்கோ, மனைவியின் மேலாசை, அன்னையின்மேலன்பு. இரண்டுக்குமிடையிலி

கண்டுகண்டுந் தேருங் கலக்கமெல்லாந் தீர்வண்ணம், பண்டைவினை வேரைப் பறிக்குநாள் எந்நாளோ.

ருந்து "இருதலைக்கொள்ளி எறும்பெனத்" தவித்தார். இந்தக் கலகத்தை வளரவிடக்கூடாதென மட்டும் எண்ணினார். "இனிமேல் இந்த வீட்டில் உங்களம்மா இருந்தால் நானிருக்க முடியாது. என்னைப் பிறந்தகத்திற்குக் கொண்டுபோய் விடுங்கள். என்றைக்கு உங்களம்மாவை வெளியில் அனுப்புகிறீர்களோ, அன்றைக்கு என்னை இங்கு கூட்டிவரலாம்" என்று மனைவியோர் நீண்ட பிரசங்கம் செய்தாள். புருஷன் ஆசைக்கடிமைப்பட்டவன். மோகத்தினால் தைரியத்தை யிழந்தவன். தம்முடைய வீட்டிலே தனியாக ஓரிடத்தைப் பிரித்துக்கொடுத்து அங்கே தன் தாயை இருக்கச் செய்தார். அவளும் தனியே சமைத்துச் சாப்பிட்டுவந்தாள்.

இந்த ஏற்பாடுகூட அவர் மனைவிக்குப் பிடிக்கவில்லை. "என் கண்ணிற் படவேகூடாது" என்று உத்தரவு போட்டாள். தாயைத் தனியே ஒரு வீட்டிலிருக்கச் செய்து, வேண்டிய பொருட்களை அவர் அனுப்பிவந்தார். கிழவி முணு முணுத்துக்கொண்டே தனியே இருந்துவரலானாள். நாளடைவில் இந்த ஏற்பாடும் மனைவியின் உபதேசத்தால் நிறுத்தப்பட்டது. கிழவிக்குப் பொருட்கள் கொடுப்பதைக் குமாஸ்தா நிறுத்திக்கொண்டார்.

கிழவி தன் தலையெழுத்தை நொந்துகொண்டு பிக்ஷாபாத்திரம் கையிலெடுத்து வயிறு வளர்க்கத் தொடங்கினாள். "நான் எத்தனையோ கஷ்டப்பட்டு அவனை வளர்த்தேன். இப்போது அவனுக்கு முன்னாலேயே பிச்சையெடுத்துச் 'சாப்பிடும்படி ஆகிவிட்டது" என்று அவள் அழுதுகொண்டே பிச்சை ஏற்றாள். அவளின் நிலையைக் கண்டு ஊராரெல்லோரும் இரங்கினார்கள். அவளுடைய மகனைத் தூற்றாதாரிலர்.

கிழவி பிச்சையேற்றுண்பது குமாஸ்தா காதுக்கெட்டியது. எட்டியதும் அவர் வருந்தினார். அவருக்குத் துக்கமாகிய நோய் வந்தது. பின்பு வீட்டை நீத்தான். காரிருளில் மறைந்தான். "நான் துரோகி, நீ தியாகி" என்று அவன் கூறியது கிழவிக்கு எப்படிக் கேட்கும்?

வே. சின்னையா, (260)
உடுவில் தெற்குச், சைவவித்தியாசாலை

---

# இளவேனில்

சே. இராசையா நீர்வேலி. (ச. எண். 119)

நந்தமிழ் நாட்டிற்கு நல்லுணர்வு தோன்ற ஆதரவளிக்க முன்வந்தவரில் தாத்தாவும் ஒருவராவர். அவர் இற்றைஞான்று உடல்வலி குன்றிய நிலையை யடைந்தும், நாமும் நம் தமிழ்த்தாயும் அந்நியர் வயமாகுந் தருணத்தைக் கண்ணுற்று அன்பின் சுடர் பொங்கி எழத் தம்மால் இயன்றவரையிற் காப்பாற்றுவம் எனத் துணிந்தனர். அவர் புகழ் என்றும் போற்றப்படற்பாலதே. அவர் தூண்டுதலின் ஈடுபட விரும்பும் யானும் பருவங்களில் ஒன்றாகிய இளவேனிலைப்பற்றிக் கூறத் துணிந்தேன்.

பருவங்கள் அறுவகையாக வகுக்கப்படும். அவை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்பன. அவற்றுள் முதற்கண் விளங்குவது இளவேனிலாகும். இளவேனிற்குரிய காலம் சித்திரை, வைகாசி மாதங்களாகும். இளவேனிற் காலம் தமிழர்களின் வருட ஆரம்பம், இன்பநுகர்ச்சிக்குரிய காலம் என ஆன்றோர் பலர்கூறுவதைச் செவி மடுத்துள்ளோம்.

இவ்விளவேனிற் காலத்தில் ஆதித்தன்றானும் தனது செங்கதிர்களை வையத்திற்குச் செலுத்தி ஒளி பரப்பா நிற்கும். அக்காலத்தில் ஆதவனது ஜெகசோதியான சொரூபம் காட்சியின்பம் வாய்ந்தது. பள்ளியினின்றும் வெளிக்கிளம்பும் தேசோமயமான நயனங்கள் இன்பவுணர்ச்சி அடையும். அச்செங்கதிர்களாற் செலுத்தப்படும் இளவெயிலும் நம் அங்கத்தினுக்கிங்கிதம் விளைக்கும்.

தண்ணிழற்றடங்காவினகத்து வைகும் ஒருவன் எய்தும் இறும்பூதுக்களவில்லை. ஆண்டு மரகதவிதானத்துப் பன்மணி அழுத்தி அழகாகச் சித்திரிப்பதை யொப்பப் பசுமையான இளந் தளிர்களினூடே இலங்கும் மலர்களின் அலங்காரக் காட்சியைப் பார்ப்பான் பரவசமடைவானன்றோ? அந்நளிர்மலர் முகைகள் எடவிழ்ந்தலரும் சமயத்து ஆண்டெழும் நறுமணத்தினைத் தென்றற்காற்றுத் தன் திசைபரப்பி, மனோகரத்தை ஊட்டா நிற்கும். நாண்மலர்களிடத்து எழாநின்ற பரிமளம் விரவிய பவனத்தைப் பூரிக்குந்தோறும் நம்மகம் புளகிதமுற்றுச் சுகானந்த நுகர்ச்சி எய்தும். இளந்தளிர்களெல்லாம் தளிர்த்து மிக அலங்காரமாக இருக்கும். இளவேனிற் காலத்து வெய்யோனின் இளங்கதிர்களின் ஒளியைப் பெற்ற பசும்புற் பாகங்களெல்லாம் மரகதக் கடல்போற் கண்களைக் கவரா நிற்கும். அவற்றைக் கண்ணுற்ற விலங்கினங்கள் மட்டற்ற களிப்போடும் அவற்றை நாடி விரைந்தோடுங் காட்சியும் மாட்சி உடைத்தாம்.

வாயு பகவான் தன் தண்ணளியைத் தண்ணீர் போற் சொரிந்து கொண்டிருப்பான். காவினூடே வைகும் மயில்கள், குயில்கள் காதலன்பால், உள்ளக்களி கொண்டு ஆனந்தமேலீட்டால் சுதி மீட்டிக், கானம் பாடிக் குதூகலிக்கின்றன. இன்னிசை பாடிப்பாடிக் கிளைகிளையாகப் பறந்து சில பட்சிகள் ஆரவாரிக்க, மற்றுஞ் சில இனமினமாகத்திரண்டு தண்ணென வீசும் தென்றற் காற்றொப்ப அதிவேகமாக, நிரை நிரையாய் வெவ்வேறு இடங்களை நாடிச் செல்கின்றன. மயில்கள் ஆட குயில்கள் கூவ. கிளி போன்ற மற்றும் பட்சிகள் நூற்றுக்கணக்காய் அணிவகுத்துப் பறந்து செல்வதைக் காண, எத்தனை அலங்காரங்கள் தோற்றும். மன்மதன் இக்காலத்தில் கருப்பம் வில்லைத்தாங்கிப் பஞ்சபாணங்களைச் சொரிந்து கொண்டிருப்பான்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இளவேனிற் காலம் தெய்வத்தன்மை பொருந்தியது. இவ்வின்பமாகிய காலத்தில் இளைஞர் சங்கத்துக்கு வேண்டிய தொண்டுகளைப் புரிந்து மாணவவுலகத்தை ஈடேற்றக் கடவுள் துணை புரிவார்.

"தாத்தாவின் புகழ் எங்கும் ஓங்குக"

---

பைங்கூழ் வினைதான் படுசாவி யாகாமல், செங்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## அருமைக் குழந்தைகாள் !

உங்களுக்கெல்லாம் ஜலதோஷம் வாராமற் கடவுள் காப்பாற்றவேண்டும்! அப்பாடா, இரண்டே நாட்களிற் ஜலதோஷம் என்ற கொடிய நோயினால் நான்பட்ட கஷ்டத்தினால்தான் இப்படி உங்களை எச்சரிக்கை செய்ய நேரிட்டது. ஆளையே கொலை செய்துபோடும்போல் அவ்வளவு உபத்திரவம் கொடுத்துவிட்டது இந்த வியாதி. ஜலதோஷம் மூக்கில் மாத்திரம்தான் உபாதையென்று நினைத்துவிடாதீர்கள். இதனால் எத்தனையோ அவயவங்களுக்குச் சொல்லமுடியாத உபத்திரவம்! இரண்டு கைகளுக்கும் ஓயாத வேலை. கண்களிரண்டும் வலி. மண்டைக் கனமும் இடியும். காது கன்னமெல்லாம் நோ. உடம்பெல்லாம் வலி.

இத்தனை கஷ்டங்களுக் குள்ளாக வேண்டும் பாருங்கள்!

இந்த ஜலதோஷத்தைப் பலரும் பலவிதமான செல்வப் பெயர் கொண்டழைக்கிறார்கள். தடிமன், தடிமல், தடுமல் என்றெல்லாம் தாய்தகப்பன்மார் கூப்பிடுவார்கள். எது நல்ல பெயர் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தப் பெயர்களெல்லாம் என்ன விதம் இந்தத் தொத்து வியாதிக்குண்டானதென்று நானறியமாட்டேன். உங்களில் யாருக்காவது தெரியமா?

பாட்டிக்குத்தான் பெரிய அலைச்சல். சுடுதண்ணீர்—மன்னிக்கவேணும்—வெந்நீர் வைத்து வைத்துத் தங்கதில் அந்த மனுஷி அலுத்துப்போனாள். கொத்தமல்லித் தண்ணீர் வைத்ததில்கூட.

இந்த ஜலதோஷம் ஒரு பெரிய கோணங்கி வியாதி. நினையாப்பிரகாரம் வந்து நாசித் துவாரங்களை அடைத்துக்கொண்டுவிடும். மனுஷருக்கு முன்னால் தோற்றக் கூட வெட்கமாயிருக்கும். மற்றவர்கள் தங்களில் பாய்ந்துவிடுமென்று தூரத் தூரப் போய்விடுவார்கள்! இரண்டு மூன்று நாட்களாக நான்பட்ட கஷ்டத்தை என்னவென்று நினைக்கிறீர்கள்?

இந்த நாட்களில் வெயில் கொஞ்சம் அதிகமாய்த்தானடிக்கிறது. நீங்களெல்லாம் சின்னப் பிள்ளைகள். வெயிலில் திரிந்தால் தலை வியர்க்கும். அப்புறம் கவனம், ஜலதோஷம் பிடித்துவிடும். பாட்டிகூடக் கிடையாது உங்களுக்கு வெந்நீர் போட்டுத்தர. அம்மா அடிக்கத்தான் வருவா!

— தாத்தா.

### தாத்தா பதில்

S. நடராஜா, (254) யாருடா தம்பி, புதிய ஆசாமியாய் இருக்கிறாய்? உமது கடிதப்படி ஒழுங்காக அவைகளையெழுதியனுப்பினால் மிகவும் பயனுள்ளவைகளாகத்தானிருக்கும். தொடர்ச்சியாக ஒவ்வொருவரைப்பற்றியும் எழுதியனுப்ப முடியுமானால் நல்லது. எழுத்துப் பிழை, வசனப் பிழையிருந்தால் தாத்தா திருத்திக்கொள்வார். எங்கே பார்க்கலாம்!

க சுப்பிரமணியம், (256) சிறுவர் போட்டியைப்பற்றி நான் பலமாகத்தான் யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறேன். இதற்கும் எல்லாரிடத்திலுமிருந்து உற்சாகம் வரவேண்டும். உமது கடிதத்திற் கண்டவைகளை நன்கு ஆலோசித்துவிட்டு உமக்கே நேரில் பதில் போடுகிறேன்.

---

### விண்ணப்பப் பத்திரம்

திகதி..............................

அன்பார்ந்த தாத்தா!

நயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணு; மலாயா 16 காசு. ]

பெயர்..................................................................

பிறந்த திகதி..................மாதம்....................வருடம்......................

விலாசம்..................................................................

..................................................................

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ..................................................

---

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு: இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபுனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஞு ஜூன் மீ 11உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.